ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2036/28 - 2017 සැප්තැම්බර් මස 13 වැනි බදාදා - 2017.09.13

*2036/28 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## *மாகாண சபை அறிவித்தல்கள்*

### வடமாகாண மாகாண சபை

*வடமாகாண மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க கனிப்பொருள் வரி நியதிச் சட்டம்*

*வட மாகாண மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க கனிப்பொருள் வரி நியதிச் சட்டம் வடமாகாண மாகாண சபையால் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது என்பதும், அது வட மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி சம்மதமளிக்கப்பட்டுள்ளது என்பதும் இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

க. தெய்வேந்திரம்,<br>
செயலாளர்,<br>
பேரவைச் செயலகம்,<br>
வடமாகாண மாகாண சபை.

பேரவைச் செயலகம்,<br>
*ஏ 9 வீதி,*<br>
கைதடி,<br>
*2017, செத்தெம்பர் 11.*

**ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டினதும் ஒவ்வொரு காலாண்டு தொடர்பிலும் எவரேனுமாளின் இயைபான மொத்த விற்பனை வரவின் மீது கனிப்பொருள் வரியொன்றை விதிப்பதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கானதுமானதொரு நியதிச்சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமாகாண மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இந்நியதிச் சட்டம் 2017 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, கனிப்பொருள் வரி நியதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், வடமாகாண ஆளுநர் எந்தத் தேதியன்று அது நடைமுறைக்கு வருவதற்கான அவரது சம்மதத்தை அளிக்கக்கூடுமோ அந்தத் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

கனிப்பொருள் வரியை விதித்தல்.

2. இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, (இதனகத்துப் பின்னர் இந்நியதிச் சட்டத்தில் " இயைபான காலாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்), இந்நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து தொடங்குகின்றதுமான ஒவ்வொரு மதிப்பீட்டாண்டினதும், ஒவ்வொரு காலாண்டுக்கும் ஒவ்வொரு ஆளிடமிருந்தும், ஆண்டொன்றுக்கு 0.5 சதவீதத்தில், அந்த இயைபான ஆண்டுக்காக அத்தகைய ஆளின் இயைபான மொத்த விற்பனை வரவின் ஒவ்வொரு பாகம் தொடர்பிலும் கனிப்பொருள் வரியொன்று விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

கனிப்பொருள் வரி விதிப்பனவு செய்யப்படற் பாலவர்.

3. (1) வடமாகாணத்தினுள் கனிப்பொருட்கள் என்ற தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆள் ஒவ்வொருவரும் இந்நியதிச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான கனிப்பொருள் வரியைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, " தொழில்" என்பது, 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழ் பெறப்பட்ட கனிப்பொருட்கள் ஒன்றில் மொத்த விற்பனையாக அல்லது சில்லறை விற்பனையாகக் கொண்டு நடாத்தப்படுகின்ற விற்பனைகள் என்று பொருளாகும். கனிப்பொருட்கள் என்பது இந்நியதிச் சட்டத்தின் பொருள் கோடலுக்கு அமைவாக இருக்கும்.

கனிப்பொருட்கள் வரிக்கு ஆளாகவுள்ளாரெனக் கருதப்படும் ஆள்.

4. ஆளொருவரினால் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் தொழில் தொடர்பில் அவரிடமிருந்து கனிப்பொருள் வரி விதிப்பனவு செய்யப்படற்பாலதாகவுள்ளவிடத்தும் அத்தொழிலின் சொத்தாண்மை மாற்றம் ஏற்படுமிடத்தும், அப்போது, 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தொழிலின் புதிய சொந்தக்காரர், சொத்தாண்மை மாற்றம் ஏற்படுவதற்கு நேர் முன்னர் அத்தொழிலின் சொந்தக்காரராக அவர் இருந்துள்ளார் என்றாற்போன்று கனிப்பொருள் வரி விதிப்பனவு செய்யப்படற்பாலவராதல் வேண்டும்.

கனிப்பொருள் வரியிலிருந்து விலக்களித்தல்.

5. (1) அமைச்சர், வடமாகாணத்தின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமாகவுள்ளதென அவர் அபிப்பிராயப்பட்டால், எவரேனுமாளினால் கொண்டு நடாத்தப்படுவதும் குறித்துரைக்கப் படக்கூடியவாறானதுமான ஏதேனும் கனிப்பொருள் தொழிலை வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் கனிப்பொருள் வரியிலிருந்து விலக்களிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான ஒவ்வொரு கட்டளையும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து அல்லது அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று வலுவுக்கு வருதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கட்டளை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மூன்றுமாத காலப்பகுதியினுள் அல்லது அத்தகைய காலப்பகுதியினுள் வடமாகாண மாகாண சபையின் கூட்டமெதுவும் நடாத்தப்படாதிருப்பின், அத்தகைய கட்டளை அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென்ற பிரேரணையின் மூலம், அத்தகைய காலப்பகுதி முடிவுற்ற பின்னர் நடைபெறும் வடமாகாண மாகாண சபையின் முதலாவது கூட்டத்தில் வடமாகாண மாகாண சபையின் முன்னர் கொணரப்படுதலும் வேண்டும்.

(3) வடமாகாண மாகாண சபை அங்கீகரிக்க மறுக்கின்ற ஏதேனும் கட்டளை, அத்தகைய மறுப்புத் திகதியிலிருந்து, ஆனால் அத்தகைய மறுப்புத் திகதிவரை அத்தகைய கட்டளையின் செல்லுபடியான தன்மைக்குப் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கட்டளை இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்ற திகதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

மொத்த விற்பனை வரவு.

6. இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஏதேனும் தொழில் தொடர்பாகவும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாகவும் "கனிப்பொருள் வரி" என்பது, எவரேனுமாளினால் கொண்டு நடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் அத்தகைய தொழிலின்போது அவ்வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்ட ஒவ்வொரு

கொடுக்கல்வாங்கல்களிலிருந்தும், உண்மையாகப் பெறப்பட்டதாயினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி, பெறப்படற்பாலதான மொத்தத் தொகையென்று பொருளாகும்.

7. ஏதேனும் இயைபான காலாண்டுக்காக கனிப்பொருள் வரி விதிப்பனவு செய்யப்படற்பாலவரான அல்லது விதிப்பனவு செய்யப்படற்பால சாத்தியமுள்ளவரான ஆளொவ்வொருவரும், ஆணையாளருக்கு எழுத்தில் முகவரியிட்டனுப்பப்பட்ட தொடர்பாடல் மூலம், அந்த இயைபான காலாண்டின் கடைசி மாதத்தின் பதினைந்தாம் நாளுக்கு முன்னர், அத்தகைய விதிப்பனவு செய்யப்படற்பாலதான தன்மையல்லது சாத்தியமாகவுள்ள விதிப்பனவு செய்யப்படற்பால தன்மை பற்றிய அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும். விதிப்பனவு செய்யப்படற்பாலதான தன்மை பற்றிய அறிவித்தல்.

8. ஏதேனும் இயைபான காலாண்டுக்கு எவரேனுமாளுக்கு விதிப்பனவு செய்யப்படற்பாலதான கனிப்பொருள் வரி, வரி மதிப்பீட்டாளரொருவரினால் அத்தகைய ஆள்மீது வரிமதிப்பீடெதுவும் செய்யப்பட்டிராமை எவ்வாறிருப்பினும், அந்த இயைபான காலாண்டின் முடிவை உடனடுத்துப் பின்வரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். கனிப்பொருள் வரி செலுத்தப்பட வேண்டிய திகதி.

9. இயைபான ஏதேனும் காலாண்டுக்காகக் கனிப்பொருள் வரி விதிப்பனவு செய்யப்படற்பாலவரான ஆளொவ்வொருவரும், அதற்கென வரிமதிப்பீட்டாளரொருவரினால் தேவைப்படுத்தப்படினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, அந்த இயைபான காலாண்டின் முடிவை உடனடுத்துப் பின்வரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர், அவரது இயைபான மொத்த விற்பனைவரவு பற்றி, ஆணையாளரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலானதும், அத்தகைய விபரங்களைக் கொண்டதுமான விபரத்திரட்டொன்றை வரிமதிப்பீட்டாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும். அவ்விபரத்திரட்டானது, கனிப்பொருள் வரி கணக்கிடப்பட்ட அடிப்படையையும் ஆணையாளரினால் குறித்துரைக்கப்பட்ட ஏனைய விபரங்கள் எவையேனுமிருப்பின் அவற்றையும் காட்டுதலும் வேண்டும். விபரத்திரட்டுக்களைக் கொடுத்துதவுதல்.

10. (1) வரிமதிப்பீட்டாளரொருவரின் அபிப்பிராயத்தில், ஏதேனும் இயைபான காலாண்டுக்காகக் கனிப்பொருள் வரி விதிப்பனவு செய்யப்படற்பாலவராகவுள்ள எவரேனும் ஆள்:- குறித்த சில விடயங்களில் வரி மதிப்பீட்டாளர் வரிமதிப்பீட்டைச் செய்தல்.

(அ) கனிப்பொருள் வரியைச் செலுத்தியிராதவிடத்து ;
அல்லது

(ஆ) அத்தகைய இயைபான காலாண்டுக்காக அத்தகைய ஆள் கனிப்பொருள் வரியாகச் செலுத்தியிருக்க வேண்டிய முறையான தொகையிலும் பார்க்கக் குறைவான தொகையொன்றைச் செலுத்தியுள்ள விடத்து, அத்தகைய வரிமதிப்பீட்டாளர், அவரது அபிப்பிராயத்தில் அந்த இயைபான காலாண்டுக்காகக் கனிப்பொருள் வரியாக அத்தகைய ஆளினால் செலுத்தப்பட்டிருக்க வேண்டிய கனிப்பொருள் வரியின் தொகையை வரி மதிப்பீடு செய்யலாம் என்பதுடன், எழுத்திலான அறிவித்தல் மூலம் பின்வருவனவற்றை உடனடியாகச் செலுத்தும்படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்:-

(i) அந்த இயைபான காலாண்டுக்கான ஏதேனும் கனிப்பொருள் வரியை அவ்வாள் செலுத்தியிராவிடின், அந்த இயைபான காலாண்டுக்காக அவ்வாறு வரி மதிப்பீடு செய்யப்பட்ட கனிப்பொருள் வரியின் தொகை ;
அல்லது

(ii) அத்தகைய ஆள் அந்த இயைபான காலாண்டுக்காகக் கனிப்பொருள் வரியாக ஏதேனும் தொகையைச் செலுத்தியிருப்பின், அந்த இயைபான காலாண்டுக்காக அவ்வாறு வரிமதிப்பீடு செய்யப்பட்ட கனிப்பொருள் வரியின் தொகைக்கும் அத்தகைய ஆளினால் உண்மையாகச் செலுத்தப்பட்ட கனிப்பொருள் வரியின் தொகைக்கும் இடையேயான வித்தியாசம்.

(2) வரிமதிப்பீட்டாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் சுரங்கந் தோண்டுதல் தொழில் நடைபெறுகின்ற இடத்தினை பரிசோதனை செய்து மொத்த விற்பனை வரவு பற்றிய விபரத்திரட்டை மதிப்பீடு செய்யும் உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பதிவேடுகளைப் பேணுதல்.

11. கனிப்பொருள் வரி விதிப்பனவு செய்யப்படற்பாலவரான ஆள் ஒவ்வொருவரும், இந்நியதிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஆளினால் கொடுத்துதவப்பட்ட இயைபான மொத்த விற்பனை வரவு பற்றிய விபரத்திரட்டை அத்தகைய ஆளினால் கொண்டு நடாத்தப்பட்ட ஒவ்வொரு தொழிலினதும் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய பதிவேட்டுடன் கணக்கிணக்கஞ் செய்வதனை வசதிப்படுத்தும் அத்தகைய முறையில் அத்தகைய பதிவேட்டைப் பேணுதல் வேண்டும்.

செலுத்தப்படாத கனிப்பொருள் வரி, தவணை தவறியதாகக் கருதப்படுதல்.

12. (1) ஏதேனும் இயைபான காலாண்டுக்கான கனிப்பொருள் வரி அல்லது அத்தகைய கனிப்பொருள் வரியின் ஏதேனும் பாகம், அத்தகைய கனிப்பொருள் வரியைச் செலுத்துவதற்காக 8 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் செலுத்தப்படாதவிடத்து, அத்தகைய பணத்தொகை அல்லது அதன் பாகம் தவணை தவறியதாகவுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தவணை தவறியதாகவுள்ள கனிப்பொருள் வரி அல்லது அதன் பாகம் :-

(அ) தனியாளொருவரினால்;
(ஆ) பங்காண்மையொன்றினால்;
(இ) கம்பனியொன்றினால் அல்லது ஆட்கள் குழுவொன்றினால்.

செலுத்தப்படற்பாலதாக இருக்குமிடத்து, அப்போது, விடயத்துக்கேற்ப அத்தகைய தனியாள், அத்தகைய பங்காண்மையின் ஒவ்வொரு பங்காளரும், அல்லது அத்தகைய கம்பனியின் அல்லது ஆட்கள் குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது வேறு பிரதான அலுவலரும், இந் நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தவணை தவறியவர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

தவணை தவறியமைக்கான தண்டம்.

13. (1) ஏதேனும் கனிப்பொருள் வரி தவணை தவறியதாகவுள்ளவிடத்து, தவணை தவறியவர், தவணை தவறுகையிலுள்ள அத்தகைய வரியுடன் சேர்த்து மேலதிகமாகப் பின்வருவனவற்றைத் தண்டமாகச் செலுத்துதல் வேண்டும்.

(அ) தவணை தவறுகையிலுள்ள தொகையின் பத்து சதவீதத்துக்குச் சமமாகவுள்ளவொரு பணத்தொகை அத்துடன்,

(ஆ) அத்தகைய வரி எந்த மாதத்தில் தவணை தவறியதாக வரத்தொடங்கியுள்ளதோ அந்த மாதத்தை அடுத்துப் பின்வரும் மாதத்தின் பதினைந்தாம் நாளுக்கு முன்னர் தவணை தவறுகையிலுள்ள ஏதேனும்செலுத்தப்படாதவிடத்து, அது தவணை தவறியதாகவுள்ள ஒவ்வோர் அடுத்துப் பின்வரும் மாதத்தின் அல்லது அத்தகைய காலப்பகுதியின் பாகத்தின் பதினைந்தாம் நாளன்று முடிவடைகின்ற ஒவ்வொரு காலப்பகுதி தொடர்பிலும் தவணை தவறியதொகையின் இரண்டு சதவீதத்துக்குச் சமமானவொரு மேலதிகப் பணத்தொகை;

ஆயின் எவ்வாறாயினும் , இவ்வுட்பிரிவின் கீழ் தண்டமாகச் செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகை எவ்விடயத்திலும் தவணை தவறுகையிலுள்ள கனிப்பொருள் வரியின் ஐம்பது சதவீதத்தை விஞ்சுதலாகாது என்பதுடன், அத்தகைய ஏதேனும் தொகை, தவணைதவறுகை எந்த விசேட சூழ்நிலைகளில் ஏற்பட்டதோ அந்த எவையேனும் விசேட சூழ்நிலைகள் காரணமாக அத்தகைய தொகையின் விட்டுக்கொடுப்பு அல்லது குறைப்பு ஒன்று நீதியானதும் ஒப்புரவானதுமாக இருக்குமென ஆணையாளர் திருப்திப்படின், விட்டுக்கொடுக்கப்படலாம் அல்லது குறைக்கப்படலாம்.

(2) 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வடமாகாண நிதி நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான மேன்முறையீடொன்று இறுதியாகத் தீர்மானிக்கப்படுவதன் மேல், (1) ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் பணத்தொகை அல்லது எவையேனும் பணத்தொகைகள் தவணை தவறுகையிலுள்ள எந்தக் கனிப்பொருள் வரிக்குச் சேர்க்கப்பட்டுள்ளதோ அல்லது சேர்க்கப்பட்டுள்ளனவோ தவணை தவறுகையிலுள்ள அந்த ஏதேனும் கனிப்பொருள் வரி குறைக்கப்படுமிடத்து, அப்போது அத்தகைய பணத்தொகை அல்லது பணத்தொகைகள் அவ்வாறு குறைக்கப்பட்டவாறான கனிப்பொருள் வரியின் மீது கணக்கிடப்படுதல் வேண்டும்.

14. முறையே நிருவாகம், வரி மதிப்பீடுகள், வரி மதிப்பீட்டின் இறுதியான தன்மையும் பிழையான விபரத்திரட்டுகளுக்கான தண்டங்களும்,விசேட விடயங்கள், தண்டங்களும் தவறுகளும்,பொதுவான கருமங்கள், ஆணையாளருக்கான மேன்முறையீடுகள், பரிசீலனைச் சபைக்கான மேன்முறையீடுகள், மேல் நீதிமன்றத்துக்கான மேன்முறையீடுகளும் வரி அறவிடுதலும், நானாவிதமானவை மற்றும் பொருள்கோடல் என்பனவற்றின் ஏற்பாடுகள் தொடர்பாக, 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வட மாகாண நிதி நியதிச்சட்டத்தின் VI ஆம் அத்தியாயத்தின் 10(4),(5),(6),(7),(8),(9),(10) ஆகிய உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுட்பட அத்தியாயங்கள் I, VII, IX, X, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXXIII மற்றும் XXXIV என்பனவற்றின் ஏற்பாடுகள், இந்நியதிச்சட்டத்தின் கீழ் முறையே நிருவாகம், வரி மதிப்பீடுகள், வரி மதிப்பீட்டின் இறுதியான தன்மையும் பிழையான விபரத்திரட்டுக்களுக்கான தண்டங்களும், விசேட விடயங்கள், தண்டங்களும் தவறுகளும், பொதுவான கருமங்கள், ஆணையாளருக்கான மேன்முறையீடுகள், பரிசீலனைச் சபைக்கான மேன்முறையீடுகள், மேல் நீதிமன்றத்துக்கான மேன்முறையீடுகளும் வரி அறவிடுதலும், நானாவிதமானவை மற்றும் பொருள்கோடல் என்பன பற்றிய ஏற்பாடுகளுக்கு ஏற்ற மாற்றங்களுடன் முறையே ஏற்புடையனவாதல் வேண்டும். வடமாகாண நிதி நியதிச் சட்டத்தின் குறித்த சில ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

15. இந்நியதிச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, பொருள்கோடல்.

"உரிமம்" என்பது, 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் என்று பொருளாகும்.

"கனிப்பொருட்கள்" என்பது, மண் உட்பட மண்ணின் மேற்பரப்பில் அல்லது அதற்குக் கீழ், திண்ம, திரவ, அல்லது வளி வடிவத்திலாயினுஞ்சரி, சுரங்கத்தோண்டப்படமுடியுமான இயற்கையாக ஏற்படும் பதார்த்தமென்றும், அத்தகைய கனிப்பொருட்களைக் கொண்டுள்ள எவையேனும் தாதுக்களென்றும், பதப்படுத்தல் மூலம் பெறப்பட்ட அத்தகைய கனிப்பொருட்களின் ஏதேனும் உற்பத்திப் பொருளென்றும் பொருளாகுமென்பதுடன், முற்றாநிலக்கரியையும் உப்பையும் உள்ளடக்கும் ஆனால் நீரகக் கனியங்களை உள்ளடக்காது.

"சுரங்கந்தோண்டுதல்" என்பது, எவையேனும் கனிப்பொருட்களை மதிப்பீடு செய்யும் அல்லது பெறும் நோக்கத்துக்காக மேற்பரப்பில் அல்லது அதற்குக் கீழ் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சுரங்கந்தோண்டுதல் என்று பொருளாகும்.

"அமைச்சர்" என்பது, வடமாகாணத்தின் அமைச்சர்கள் சபையின் எந்த அமைச்சருக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும்.

"காலாண்டு" என்பது, ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக, அவ்வரிமதிப்பீட்டாண்டின் முறையே ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் அல்லது சனவரி மாதங்களின் முதலாவது நாளன்று தொடங்குகின்ற மூன்று மாத காலப்பகுதி என்று பொருளாகும். அத்துடன்,

"ஆள்" என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவை உள்ளடக்கும்.

"ஆணையாளர்" என்பது, வட மாகாண மாகாண சபையின் மாகாண இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் என்று பொருளாகும்.

16. இந்நியதிச் சட்டத்தின் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் தமிழ் உரை மேலோங்கி நிற்றல்.

9-790

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.